உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 7 | 1925 ௵ பிப்ரவரி ௴ | பகுதி 2

தெய்வ வணக்கம்

தேடுதற் கரிதான நவமணி யழுத்திய
செங்கடனை யமுதம்வாய் கொள்
செயமளித் தருளெனக் கென உவப் பொடுவந்து
சேவடி பிடித்த தெனவும்
நீடுமைக் கடல் சுட்டதிற் கடைந் தெழுகடலும்
நீ யெமைக் காக்க எனவும்
நிபுடமுடி நெடியகிரி யெந்தமைக் காக்கவெனும்
நிகர்கின்ற துங்க நெடுவேல்
ஆடுமைக் கணைபணைக் கதிர்முடிப் புடை யெயில்.
அடலெரிக்கொடிய வுக்ர
அழல் விழிப் படுகொலைக் கடையகட் செவியினுக்
கசினைத் தனியெடுத் தே
சாடுமைப் புய லெனப் பசுநிறச் சிகரியில்
தா கியித் துடன் நடிக்கும்
சமரமயில் வாகனன் அமரர் தொழும் நாயகன்
ஷண்முகன் தன் கை வேலே.

அருணகிரிநாதர் அருள்வாக்கு

ஸ்ரீராம தீர்த்த ஸ்வாமிகள்.

ஸ்ரீ ராம தீர்த்த ஸ்வாமிகள் உலகப்புகழ் உடம்பெடுத்த மகான்களில் ஒருவர். இவர் உலகமெங்கும் சஞ்சரித்து அநேக அரிய பெரிய பிரசங்கங்கள் செய்து மகா மேதாவியெனப் பேர் பெற்றவர். இவருடைய பிரசங்கங்களெல்லாம் ஆங்கில பாஷையில் புத்தக ரூபமாக வெளிவந்துள்ளன. ஒவ்வொரு பிரசங்கமும் உபமான உபமேயங்களுடனும் மேற்கோள்களுடனும் சாதாரணமான உலக நடவடிக்கைகளைக் கொண்டு அரிய விஷயங்களை விளக்கக்கூடியதாயுமிருக்கும். ஆதலால் இவருடைய பிரசங்கங்களடங்கிய நூல்கள் ஏராளமாகச் செலவாகின்றன.

ஸ்ரீராம தீர்த்த ஸ்வாமிகள், கோஸேன் ப்ராமண குலத்தைச் சேர்ந்தவர். இவர் பஞ்சாப் மாகாணத்தில் குஜரான்வாலாவிலேயுள்ள முராலிவாலா என்னும் ஒரு சிறு ஊரிலே 1873ம் வருஷம் ஜனனமானார். இந்த மகானை மக்கட் செல்வமாக அடையத் தக்க அருந்தவம் செய்திருந்த தாய் தந்தையர் இவரடைந்த பெருமைகளைக் கண்டு மகிழ்வதிற்கில்லாமல் இவர் பிறந்த சில தினங்களுக்குள்ளேயே காலஞ்சென்று விட்டனர். ஸ்வாமிகள் பிறந்ததும் ஜோதிடர்கள் இவ்வரைப் பார்த்து, "இவர் உலகம்புக

முத்தக்க மகா விவேகியாக விளங்குவார்" என்று சொன்னார்களாம்.

தாய் தந்தையர் இறந்தனரேனும் ஸ்வாமிகளுடைய தமையனார் ஸ்வாமிகளை மிகச் செல்வமாக வளர்த்து வந்தார். ஸ்வாமிகள் அக்ஷராப்யாஸம் செய்விக்கப் பெற்றது முதல் படிப்பில் மிகவும் சுறுசுறுப்பாக இருந்து வந்தார். ஒரு தரம் ஒன்றைச் சொல்லிக் கொடுக்கக் கேட்டால் பிறகு ஸ்வாமிகள் அதை மறப்பதில்லை. அதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். ஸ்வாமிகள் வசன பாடங்களைத் தடையின்றிப் படிக்கத் தொடங்கியது முதல் இராமாயணம், மகா பாரதம், பாகவதம் முதலிய உயர்ந்த கிரந்தங்களை அவாவுடன் படிப்பார், அவாவுடன் பிறர் படிக்கும்போது கேட்பார். அந்தக் கதைகளில் ஸ்வாமிகளுக்கு இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாத அன்பிருந்தது. அதனால் ஸ்வாமிகள் அந்தக் கதைகளை அடிக்கடி தனியே யிருந்து சிந்தித்துக் கொள்வர்; அடிக்கடி படித்துப் படித்து ஞாபகப் படுத்திக்கொள்வர். தம்முடன் பழகிய சிறுவர்களிடம் அக்கதைகளைப் பற்றிக் கேள்வி கேட்டு அவர்கள் விடை கொடுக்க முடியாதபோது தாமே விடை தந்து மகிழ்வர். இதனை யன்றி ஸ்வாமிகள் தெய்வபக்தியிலும் சிறந்து விளங்கினர். ஸ்வாமிகள் பால்யத்தில் இவ்வாறு அதிசயோக்தமாக விளங்கியதை இன்னும் அவ்வூரிலே ஜனங்கள் சமயம் வந்தபோது பேசிக்கொள்வதுண்டு.

ஸ்வாமிகள் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து கிரமமாகப் படித்து வந்து காளடைவில் எம். ஏ. (M. A.) பரீக்ஷையில் தேறினர். பள்ளிக்கூடத்தில் ஸ்வாமிகள் தம்மு

டைய வகுப்பில் மற்ற பிள்ளைகளெல்லோரையும் விட முதன்மையாய் விளங்குவார். ஆகையினால் உபாத்யாயர்கள் ஸ்வாமிகளிடத்தில் பரமப் பிரீதி பாராட்டி அவர்க்கு ஐயந்திரிபறப் பாடங்களை விருப்பத்துடன் போதிப்பர். ஸ்வாமிகள் பி. ஏ. வகுப்பில் எல்லோர்க்கும் முதன்மையாகத் தேறினர்.

எம். ஏ. பரீக்ஷையிலே தேறியதும் ஸ்வாமிகள் லாஹூரில் கிறிஸ்தியன் கலாசாலையில் கணித சாஸ்திர போதகாசிரியராக அமர்ந்தார். ஸ்வாமிகள், தம்முடைய வகுப்பில் பிள்ளைகள் எளிதிலுணரத் தக்கபடி சாமர்த்தியமாய்ப்போதித்துவந்தார். ஸ்வாமிகளுடைய போதன சக்தியைக் கண்டு ஏனைய உபாத்திமார்களும் தலைமை உபாத்தியாயரும் ஸ்வாமிகளைப் புகழ்வதுண்டு, ஸ்வாமிகள் மகா நிபுணத்வம் வாய்ந்தவராயிருந்தும் கர்வம் என்பது ஒரு சிறிதும் கொள்ளாமல் எல்லோரிடமும் பணிவுடையவராயும் மகா சாந்த சீலராயும் விளங்கினர்.

ஸ்வாமிகள் எப்போதும் பிறர் தம்மை விரும்பும்படி இனிய மொழிகூறி மகிழ்வர். ஸ்வாமிகளுக்கு பாரஸீக பாஷையிலும் (Persian Language) பாண்டித்யமுண்டு. ஸ்வாமிகளின் திருமேனியின் அழகு கண்டவர் கண்களைக்கவரும், அவர் தம் கண்களும் நெற்றியும் விசாலமாயிருக்கும். புருவம் நீண்டு மயிரடர்ந்து அவருடைய பார்வைக்கு ஓர் அழகைத் தருவதாயிருக்கும். ஸ்வாமிகள் எப்போதும் மந்தஹாஸ வதன முடையவராயும் கம்பீரமான பார்வை யுடையவராயுமிருப்பர்.

ஸ்வாமிகளிடத்தில் கோப மென்பது ஒரு சிறிதும்

ஒரு போதும் உண்டாகாது. அவரைக் கண்டவர், "அன்பே உலகமுய்யத் திருவவதாரஞ் செய்துள்ளது" என்று புகழ்வர்.

இத்தகைய பெருமையும் குண நலமும் வாய்ந்த ஸ்வாமிகளை, கலாசாலைத் தலைமை உபாத்தியாயர் ப்ரொவின்ஷியல் ஸிவில் ஸர்விஸ் (Provincial Civil Service) பரீக்ஷைக்குப்போய் பாஸ் செய்யும்படி வற்புறுத்தினார். ஸ்வாமிகளுக்கு உலக வாழ்வில் வர வர விரக்தி யேற்பட்டு வந்த படியால் அவ்வாறு செய்ய விருப்ப மில்லாமல் பலவாறு சாக்குப் போக்குகள் சொல்லிக் கொண்டே வந்து 1899-ம் வருஷத்தில் தமது உத்யோகத்தைவிட்டு வனஞ்சென்று தெய்வத்தியானத்திலமர்ந்தார்.

அப்பால் ஒரு வருஷத்தில் அவர் ஸந்யாஸியானார். அதன் பின் ஸ்வாமிகள் தேச சஞ்சாரஞ் செய்யத் தொடங்கி ஜப்பான், எகிப்து, அமெரிகா முதலிய தேசங்களுக்குப் போய்ப் பிரஸங்கங்கள் செய்தார். ஆங்கில பாஷையாலும் பாரஸீக பாஷையிலும் ஸ்வாமிகள் செய்த பிரஸங்கங்கள் அநேக முண்டு. ஸ்வாமிகள் பிரஸங்கஞ்செய்து கொண்டிருக்கையில் நடுவில் ஓம் ஓம் என்று பாடுவார். தம்மை மறந்தே வெகு நேரம் வரையில் தியானத்திலிருப்பார்.

நெடுகலும் பிரஸங்கஞ்செய்து விட்டு 1905-ம் வருஷம் ஸ்வாமிகள் ஜன்ம பூமியாகிய பாதகண்டத்துக்கு வந்தார்; அடுத்த வருஷம் அதாவது அவருடைய முப்பத்து மூன்றாவது வயதில் ஸ்வாமிகள் வட மதுரையில் மகா சமாதியாலே கலந்து விட்டார்.

உத்தமப் பெண்களின் உயர்வு.

இந்த விஷயமாகத் திருக்குறள் குமரேச வெண்பா சொல்லுவதைப் பாருங்கள். அதாவது

“ சீதை வனம் புகுந்தும் சீருற்றாள் ஏனழகன்
கோதை குலைந்தாள் குமரேசா—மாதர்
சிறை காக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை ”.

என்பதாம்.

இதன் கருத்தாவது சீதாதேவி வனத்தை யடைந்த காலத்திலும் தனது நிறையாகிய கற்பைக் காத்து வந்த படியால் பெருமையையே கைப்பற்றினாள். அழகன் என்பவனுடைய மகளோ அவ்வாறில்லாமல் சீர்குலைந் தாள். ஆதலால் பெண்களைச் சிறை வைத்துக் காப்பதி னால் ஒரு பயனுமில்லை. அவர்கள் தமது கற்பு நிலையில் மனம் வைத்துத் தங்களைத் தாமே காத்துக்கொள்வதே மேன்மை என்று நாயனார் கூறுகின்றார்.

சீதா பிராட்டி வனம்புகுந்த சங்கதி நமக்குத் தெரிந்ததே. அந்தக் காலத்திலும் அவ்வம்மை தமது கற்பு நிலையிலேயே கருத்துங் கண்ணுமாயிருந்தாள். அவ்விதம் இருந்தபடியாற்றான் அந்த உத்தமி உலகம் புகழும் பெருமையையடைய நேர்ந்தது. உத்தமப் பெண்கள் தங்கள் கற்பைக் காப்பதில் சீதா பிராட்டியைப் போல் கலங்கா நிலையில் இருக்கவேண்டும். அப்படி இராதவர்கள் அதா

வது தங்களைத் தாமே காத்துக்கொள்ளச் சக்தியற்றவர்கள், அழகன் என்று அழைக்கப்படும் உதயன் என்கிற இராஜனுடைய மகள் பலமான காவலோடு கூடியிருந்தும் எப்படி தனது கற்பை இழந்தாளோ அப்படி தங்கள் கற்பை இழந்து துன்பப்படுவார்கள்.

அந்தச் சரித்திரத்தை அறிய விரும்புவோர்க்கு அதை இங்கு சுருக்கமாகச் சொல்லுகிறோம். கவனமாய்க் கேட்டு நல்ல வழியில் நடந்துவர நமது பெண் மணிகளைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கதை.

பூர்வ காலத்தில இந்தப் பரத கண்டத்தின் மேல் கோடியில் அளகை என்னும் பெயரையுடைய நகரமொன்றிருந்தது. அந்தப் பட்டணத்தை உதயன் என்பவன் அரசு புரிந்து வந்தான். இந்த ராஜனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவளுடைய பெயர் ஏலங்குழலாள். அவள் மிகவும் அழகு வாய்ந்தவள். அவள் பக்குவ திசையை யடைந்தும் தகுதியான கணவன் கிடைக்கவில்லை. அது பரியந்தம் அவளைப் பாதுகாக்கவேண்டி அவளுடைய தந்தை தோழிமார் பலர்சூழ ஒரு கன்னிமாடத்தில் வைதது அவளைப் பாதுகாத்து வந்தான். அப்படி காதது வந்தும் அவளுக்குத் தன்னைத்தான் காத்துக்கொள்ளும் உயர்ந்த எண்ணம் இல்லை. "எத்தனைநாள் இப்படி நாம் சிறை யிருப்பது" என்று அவள் மனம் வருந்தி வந்தாள். இப்படி யிருக்க, ஒருநாள், பாடலிபுரதது அரசன் மகனான சந்தனன் என்பவன் அளகைக்கு வந்தான். வந்தவன இந்தப் பெண்மணியைத் தெருவே சென்ற போது கண்டான். கண்டதும் அங்கேயே சிறிதுநேரம

நின்றான். ஏலங்குழலாளும் இவனைப் பார்த்தாள். சித்தப்பிரமை கொண்டாள். உடனே ஒரு கடிதம் எழுதி இவன் முன் எறிந்தாள். இவனும் அதை எடுத்துக்கொண்டான். இவன் ராஜபுத்திரனாயிருந்தும் செல்வாக்கால் கல்வி கற்காதவனாயிருந்தான். அதனால் அவன் தான் எடுத்த கடிதத்தைப் படித்துணரும் வல்லமையில்லாதவனானான்; சுற்று முற்றும் பார்த்தான். அருகில் ஒரு குஷ்டரோகியிருந்தான். அவனுக்குப் படிப்பு தெரியும். அவனிடம் அவன் இந்தக்கடிதத்தைக் காட்டினான். அதைப் படித்த குஷ்டரோகி அதில் ஓர் இடத்தைக் குறிப்பிட்டு அங்கு இராஜகுமாரத்தி வருவதாய் எழுதியிருந்ததைக் கண்டு சந்தோஷங் கொண்டான். சிறிது நேரம் எதையோ சிந்திப்பவன் போல் இருந்து அரசகுமாரனைப் பார்த்து "ஐயா! நீர் இங்கு ஏன் வந்தீர்? வீணாய் உமது உயிரை ஏன் போக்கிக் கொள்ளவேண்டும்? இந்த ஊர் அரசன் உம்மைக் கொன்று விடும்படி உத்தரவு செய்திருக்கிறான். அந்தச் சங்கதிதான் இந்தக் கடிதத்தில் கண்டிருக்கிறது. இதைக் காண எனக்கு மிகவும் பரிதாபமாயிருக்கிறது. இந்த நிமிஷமே இந்த ஊரை விட்டுப் போய்விடும்" என்று சொன்னான். இதைக் கேட்ட அரசன் மகனும் அவ்விதமே போய்விட்டான்.

குஷ்டரோகி, அரசன் மகளைக் காணும் ஆசையால், கூடிய வரையில் தன்னைச் சுத்தஞ்செய்து கொண்டு குறித்த நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் காத்துக் கொண்டிருந்தான்.

அரசன் மகளும் தன்னை உயர்ந்த ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு பண்டு பலகாராதிகளுடன் அங்கு வந்தாள்; தான் கோரிய புருஷனுக்குப் பதிலாகக் குஷ்டரோகியைக் கண்டாள். திடுக்கிட்டாள்; இனி இந்தப் பிராணனை வைத்துக் கொண்டிருப்பதில்

பழியேயின்றி வேவெருரு பயனுமில்லை யென்றெண்ணி உயிர்துறந்தாள். ஏன் இவள் இந்த துர்மரணத்துக் காளாகவேண்டும்? தன்னைத் தான் காத்துக் கொள்ளும் தன்மை இவளிடத்தில் இல்லாமை யாலல்லவா?.

நற்குலத்தில் பிறந்த பெண்கள் இந்த இழிவான செய்கைக்கு உடன்பட மாட்டார்கள். அவர்கள் சீதா பிராட்டியைப் போல் திடமான எண்ணத்தில் நிற்பார்கள். உத்தமப் பெண்கள் சீதா தேவியைப் போல் நடந்து வந்து தாங்கள் பிறந்த வீட்டுக்கும் புகுந்த வீட்டுக்கும் பெரும் புகழைத் தேடி வைப்பார்கள்.

ம. இராஜகோபால பிள்ளை.

தமிழ்.

"வாசுதேவனே வந்தாளு மெந்தனை"—என்ற மெட்டு

உயர்க வுயர்கவே—தமிழ்—உயர்க வுயர்கவே
உயர்க உயர்க உயர்க உயர்க உயர்க வுயர்கவே.

1. தேசத்தீர்களே !—தமிழ்—நேசித்தீர்களேல்
மாசு போய்த்தே சார்ந்து சுகம் மன்னு வீர்களே.
2. நாட்டதற்கிங்கு—கெடல்—காட்டுந்துர்க்குறி
மேட்டிமையாம் பாஷை வீட்டில் என்று நினையினே.
3. தேசத்தின் னுயிர்—சொந்த—பாஷை யாகுமே
மோசம் போயினீர் தேசத்தை நாசமாக்கினீர்.
4. வங்கம் நாநாளும்—உயர்ந்து—வளர்ந்திடல் காணீர்
தங்கத் தமிழ் தங்க மிங்கு மங்க லாகுமே
5. புத்தகம் பத்தி—ரிக்கை—போதவில்லையே?
நத்தி நீங்கள் சங்கஞ் சேர்ந்து நாட வில்லையே
6 படித்திடவாரீர்—உயிர்—கொடுத்திடச் சேரீர்
மிடித்தல் நீங்கி மேன்மை நாளும் அடுத்திடத் தேரீர்
7. சித்தம் வைத்திடீர்—உன்—மத்தம் விட்டிடீர்
நித்தம் உயர்ந்து பாஷை தன்னில் நேர்மை யுற்றிடீர்.
8. முத்தமிழ்க் குறுஞ்—சிவன்—நத்தும் சற்குரு
சக்தி வேலன் அருளினால் தமிழ் நித்தம் உயர்கவே.

உயர்க உயர்கவே—தமிழ்—உயர்க உயர்கவே
உயர்க உயர்க உயர்க உயர்க உயர்க உயர்கவே.

பண்டிதர்—சே. ரா. கணபதி சுப்ரமண்ய ஐயர்

குருமொழி கொண்டு பெருமகிழ்வோடிரு

கௌரவர் நூறு பேர்களும் பாண்டவர் ஐவரும் துரோணர் என்கிற ஓர் அந்தணரிடம் வில்வித்தை பயின்றனர். துரோணருக்கு அசுவத்தாமா என்று ஒரு மைந்தனிருந்தான். அவனும் இவர்களோடு வில் வித்தை பயின்றான். இவர்களேயன்றி யாதவ வீரர்களிலே சிலரும் அம்முனிவரிடம் வித்தை பயின்றனர்.

துரோணர் சிறந்த தபோதனராகவும் இணையிடற்ற வில்லாசிரியராகவும் விளங்கியபடியால், மாணவர்களனைவரும் அவரிடம் தெய்வ விசுவாசம் பாராட்டிக் குறைவற்ற வழிபாடுடையவராயிருந்து வில் வித்தை பயின்று வந்தனர். ஆயினும் அர்ஜுனனைப்போல் ஏனையோர் நடந்துகொள்ளவில்லை. அர்ஜுனனே ஆசிரியர் குறிப்பறிந்து நடந்து அவருடைய பரிபூர்ணமான அன்பிற்குப் பாத்திரமானான். துரோணர், தம் மாணவர் அனைவரும மேன்மை யடையத்தக்க வழியில் வித்தை போதித்து வந்தாராயினும அர்ஜுனனுடைய சுறுசுறுப்பிலும் ஊக்கத்திலும் அன்பிலும் ஈடுபட்டு அவனிடம் புத்ர பாவனை வைத்துச் சில விசேஷ வித்தைகளைக் கற்பித்து வந்தனர்.

இவ்வாறிருக்கையில் துரோணர் ஒரு நாள் தம்முடைய மாணவர் அனைவரையும் நோக்கி, "அருமை மாணவர்காள்! உங்களால் எனக்கு ஆகவேண்டிய காரியம் ஒன்றுண்டு. அது நீங்கள் வித்தையிலே குறை

வற்ற பாண்டித்யமடைந்த பின் செய்யவேண்டுவதாகும்'' என்றார்.

இதைக் கேட்டதும் அர்ஜுனன், வீரன்கை வில்லி லிருந்து விடுபட்ட அம்புபோல் முன்வந்து வணங்கி நின்று, "குருநாதரே, சிந்தனை வேண்டாம். எனக்குக் கட்டளையிடுங்கள்; நான் ஒருவனாகவே அந்தச் செய்கை யைச் செய்து முடிக்கிறேன்'' என்று உறுதிமொழி கூறினான். துரோணர் உடனே, அர்ஜுனனைத் தம் அருகிலழைத்து இருகரங்கொண்டு தழுவி, "என் அப் பனே, மாணவர்களால் அடையத்தக்க நன்மைகளை நான் இன்றே அடைந்தேன்'' எனக்கூறி மகிழ்ந்து, தன் புதல் வன் அசுவத்தாமாவை யழைத்து "நீ இன்று முதல் அர்ஜுனனையே உனக்கு உயிர் நண்பனாகக் கொள்'' என்றார்.

அசுவத்தாமா, "அப்படியே நடக்கிறேன்'' என்று கூறி அர்ஜுனனைத் தனக்கு ஆருயிர் நண்பனாகக் கொண்டான். அர்ஜுனன், முகத்தில் புன்முறுவல் தோன்றப் பெரு மகிழ்ச்சி யடைந்து ஆசிரியரைத் தன் இருகரங்குவித்து வணங்கி, "குருநாதரே, இன்று முதல் நான் உமக்குக் கட்டுப்பட்டவன். உமது திருவருளையே ஜீவாதாரமாகக் கொண்டவன்'' எனக் கூறி ஆசிரிய ருடைய ஆசீர்வாதம் பெற்றான்.

அர்ஜுனன், களங்கமற்ற மனத்தினனா யிருந்த படியால், அவனிடம் உற்சாகமும் ஊக்கமும் உறுதியும் சுறுசுறுப்பும் குடிகொண்டன. அதனால் அவனுடைய கருத்தெல்லாம் வித்தை பயில்வதிலேயே நிலையாய் நின்றது.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்னும் தமிழ்வேதத் திருவாக்கிற்கிணங்க, நாளடைவில் அர்ஜுனன் வில்வித்தையில் அபாரசக்தி யுடையவனானன். அதனால் துரோணர் அவனிடம் பின்னும் அதிகமாக நேசம் பாராட்டினர். ஆசிரியருடைய நேசம் பெற்ற மாணவனாகிய அர்ஜுனன் களங்கமற்ற சந்திரனைப்போல் விளங்கினான்; கம்பீரமான தோற்றமும் மதயானையைப்போன்ற நடையும் மந்தகாஸ வதனமும் வீரப் பார்வையும் உடையவனானன்.

இவ்வாறிருக்கையில் துரோணர் தம் புதல்வனுக்கு இரகஸ்யமாய்ச் சில வித்தைகளைக் கற்பிக்க எண்ணங் கொண்டு தமது மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கமண்டலங்கொடுத்து நதிக்குப்போய்த் தண்ணீர் கொண்டு வந்து கொட்டும்படி கட்டளை யிட்டனுப்பினார். ஆனால் தம் புதல்வன் அசுவத்தாமாவிடம் மாத்திரம் ஒரு குடம் கொடுத்தனுப்பினார். கமண்டலத்தில் நீர் விரைவில் நிரம்பாது. குடத்தில் விரைவில் நீர் நிரம்பிவிடும். ஆதலால் அசுவத்தாமா தன்னுடைய குடத்தில் நீரை மொண்டு கொண்டு எல்லோருக்கும் முன்பு புறப்பட்டான். அதனைத் தன் கூர்ந்த அறிவினாலே உணர்ந்த அர்ஜுனன் தன் கமண்டலத்தில் அந்த க்ஷணமே வருணாஸ்திரப் பிரயோகத்தினால் நீரை நிரப்பிக்கொண்டு அசுவத்தாமாவுடன் கூடவே போய்க் குருவினிடம் நின்றான். அப்போது குரு அசுவத்தாமாவுக்கு இரகஸ்யமான சில வித்தைகளை உபதேசித்தார். அர்ஜுனன் அவற்றை, தன் யுக்தியினாலே கற்றுணர்ந்தான்.

இவ்வாறு அர்ஜுனன் வித்தை பயில்வதில் ஊக்க முடையவனு யிருப்பதை உணர்ந்த துரோணர் பரிசார கர்களை அழைத்து, "இனி அர்ஜுனனுக்கு இருட்டிலே அன்னமிடாதேயுங்கள். எப்போதும் வெளிச்சத் திலேயே அன்னமிடுங்கள். இந்தக் கட்டளை அவனுக்குத் தெரியாமலிருக்கட்டும்" என்று கூறினர்.

பரிசாரகர்கள் அன்று முதல் அர்ஜுனனுக்கு அவ்வாறே அன்னம்படைத்து வந்தனர். அப்பொழுது ஒரு நாள் விளக்கு அவிந்துவிட்டது. அர்ஜுன னுடைய கை, முன்னுள்ள பழக்கத்தினுலே அவனுடைய வாயில் சோற்றை ஊட்டியது. அவன் அதைக் கண்ட தும் பழக்கந்தான் எதற்குங் காரணம் என உணர்ந்து அன்று முதல் இருட்டிலும் வித்தையை அப்யஸித்து வரத் தொடங்கினுன்.

இதனை யறிந்த துரோணர் அளவுகடந்த மகிழ்ச்சி யடைந்து ஒரு நாள் அர்ஜுனனைத் தனியே சந்தித்து, "அர்ஜுன, உன்னிடத்தில் எனக்குண்டாயிருக்கும் ஸந்தோஷத்திற்கு அளவேயில்லை. அர்ஜுனனுக்கு நிகரான வில்லாளி இல்லை என்று உலகம் புகழும்படி இர கஸ்யமான விஷயங்கள் பல உனக்குக் கற்பிக்கப்போகி றேன்" எனப் புகன்று அவனுக்கு யானையேற்றம், குதிரையேற்றம், யானைச்சண்டை, குதிரைச்சண்டை, கால்நடைச் சண்டை முதலியவைகளை யெல்லாம் கற்றுக் கொடுத்தார்.

இச்சமயத்தில் ஏகலைவன் என்னும் வேடனொரு வன் வந்து துரோணரைப் பணிந்து தனக்கு வித்தை கற்றுக் கொடுக்க வேண்டுமாறு வேண்டினுன். துரோ

ணர், "ஏகலைவ, நீ உன் இருப்பிடத்திற்குப் போ, வில் வித்தை உனக்குத் தானேவரும்" எனச்சொல்லியனுப்பினர். ஏகலைவன் அவர் திருவாக்கையே தனக்கு உயர்ந்த போதனையாக எண்ணி மகிழ்ந்து அவரையே குருவாகக் கொண்டான். ஏகலைவன் இவ்வாறு குருவின் அநுக்ரகம் பெற்றுச் சென்ற பின், ஒரு நாள், கௌரவர்களும் பாண்டவர்களும் குருவினிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு காட்டிற்கு வேட்டையாடச் சென்றனர். வெகு நேரம் வேட்டையாடிய பின் அவர்கள் நகரத்துக்குத் திரும்பிவருகையில் ஏகலைவனிருந்து வரும் காட்டின் வழியாக வந்தனர். அவர்களோடு சென்றிருந்த வேட்டை நாய்களில் ஒன்று ஏகலைவன் வசித்துவரும் குடிசையின் பக்கமாய் ஓடி அவனைக்கண்டு குரைத்தது மல்லாமல் அங்கொருபக்கம் நீர் விட்டோடியது.

இதைக் கண்ட ஏகலைவன் சினங்கொண்டு அந்த நாயின் மீது ஒரு பாணத்தைவிட்டான். அது நான்கு பிளவாக வெளிப்பட்டு நாயின்மேலே பாய்ந்தது. பாணம் பாயவே நாய் குரைத்துக்கொண்டு அர்ஜுனனிடம் ஓடியது. அர்ஜுனன் "நாய் இவ்வாறு குரைத்துக்கொண்டுவரக் காரண மென்ன? இதனை அடித்தவன் யாவன்?" எனக்கருதி அதைக் கவனித்தான். அதன் மேல் பாணம் பாய்ந்திருப்பதைக் கண்டு, "ஓ இந்த வனத்தில் இவ்வாறு பாணம் எய்யவல்லவன் யாவன்?" என அதிசயித்து அதனை எல்லோரிடமும் கூறி, "வாருங்கள் இந்த வில்லாளியைப் பார்த்துவருவோம். நாய் இந்தக் காட்டிற்குள்ளேயிருந்துதான் வருகிறது" என்று மற்றவர்களுடன் அந்தக் காட்டிற்குள்ளே பிர

வேசித்தான். நாய் அவர்களுக்கு முன்னே வழி காட்டிக்கொண்டே ஓடி அவர்களை ஏகலைவனிடம் சேர்ப்பித்தது.

அங்கே ஏகலைவன் தன் குடிசையினருகே நின்று கொண்டிருக்கக் கண்ட அர்ஜுனன், "நீ தானே இந்த நாயின் மீது சற்று முன் அம்பு எய்தவன்? நீ யார்? இந்த நாயின் மேல் நீ ஏன் அம்பெய்தாய்? உனக்கு இந்த நாய் செய்த தீங்கென்ன?" என்று வினவினான்.

அர்ஜுனன் இவ்வாறு கேட்டதும் ஏகலைவன் அஞ்சி மெய்ந்நடுக்கமடைந்து வணங்கி நின்று, "ஐயா, நான் ஹிரண்ய தநுஸ் என்னும் வேட ராஜனுடைய மைந்தன். என் பெயர் ஏகலைவன். துரோண மகரிஷியின் மாணவர்களில் நானும் ஒருவன். உங்களுடைய நாய் என் குருநாதனுடைய ஸந்நிதியை அசுத்தப் படுத்திய படியால் நான் அதனை அடித்தேன்" என்றான்.

அர்ஜுனன் இதைக் கேட்டதும், சிறு நகை செய்து சிரமசைத்து "நல்லது, துரோணருடைய மாணவரில் நீயும் ஒருவனே? ஸந்தோஷம்" என்று கூறி அவனிடம் விடைகொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு எல்லோருடனும் நகரத்திற்குப் போனான். பின், அவன் துரோணரைத் தனியே கண்டு வணங்கி நின்று, "குருநாதரே, 'எனக்கு உன்னைவிட மேலான மாணவன் இல்லை' எனத் தாம் முன்பு கூறியது நினைவிருக்கிறதா?" என்று கேட்டான்.

துரோணர், "ஆம் அதில் என்ன குறை வந்துவிட்டது?" என்று கேட்டார். அர்ஜுனன், "ஸ்வாமி, என்னைவிட மேலானவனொருவன் காட்டிலிருக்கிறான்.

வேட்டையாடி வரும்போது அவனை நாங்கள் கண்டோம்" என்று கூறி அவன் வரலாறும் அவன் நாயின் மீது பாணம் எய்த திறத்தையும் தெரிவித்தான்.

துரோணர், "அப்படியா, எனக்கு அப்படி ஒரு மாணவனிருப்பதாகத் தெரியவில்லையே. வா நாமிருவர் மாத்திரம் போய் அவனைப் பார்த்து வருவோம்" என, அர்ஜுனன் உடனே அவரை அந்தக் காட்டிற்கு அழைத்துக்கொண்டு போய் ஏகலைவனைக் காட்டினான். ஏகலைவன் துரோணரைக் கண்டதும் அவர் திருவடியிலே சிரந்தோய விழுந்து பணிந்து, "உமது மாணவனாகிய என்னை ஆசீர்வதித்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

துரோணர் பெருவியப்புடன் அவனை நோக்கி, "நீ என்னுடைய மாணவன் தானா? அப்படியானால், இந்த க்ஷணமே உன்னுடைய வலது கைப் பெருவிரலை எனக்குக் குருதக்ஷிணையாகக் கொடு" எனக் கேட்டார். ஏகலைவன் "ஸ்வாமி பாக்யம் செய்தவனானேன்; என் பிறவி பயனடைந்தது; இதோ தருகின்றேன்" என்று கூறி மகிழ்ந்து, உடனே தன் வலது கைப் பெரு விரலை நறுக்கி அவரிடம் கொடுத்தான்.

துரோணர், "நீ நீடுழி வாழக்கடவாய்" என ஆசீர்வதித்து, "நீ எப்படி எப்பொழுது என்னிடம் வித்தை கற்றுக்கொண்டாய்!" என்று வினவினார். ஏகலைவன், "ஸ்வாமி, நான் தங்களிடம் வில்வித்தை கற்றுக்கொள்ள அவாக்கொண்டு தமது ஸந்நிதானத்துக்கு வந்து அந்த அவாவைத் தெரிவித்துப் பணிந்தேன். அப்பொழுது நீங்கள் என்னை ஆசீர்வதித்து, 'நீ உன் இருப்பிடம் போ, உனக்கு வித்தை தானே வரும்' எனத் திருவாய் மலர்ந்த

ருளினீர்கள். அதனையே போதனையாகக் கொண்டு இங்கே வந்து, தமது திருவுருவம் போல் ஒரு பதுமை செய்து வைத்து அதனை நாடோறும் மெய்யன்போடு பூசித்துக்கொண்டு வில்வித்தை பயின்று வந்தேன். நாளடைவில் அருமையான வித்தைகளெல்லாம் எனக்குப் புலனாயின" என்றுரைத்து, தான் அவருடைய உருவத்தை வைத்துப் பூசித்துவரும் ஸந்நிதானத்தையும் காட்டினான்.

அர்ஜுனனும் துரோணரும் பார்த்து வியப்பும் மகிழ்ச்சியுமடைந்து அவனை வாழ்த்தி விடை கொண்டு நகரமேகினர். அர்ஜுனன் அன்று முதல் குரு பக்தியின் விசேஷமுணர்ந்து துரோணரிடம் இன்னும் அதிகமான பக்தி பாராட்டி வரலானான்.

இவர்கள் இவ்வாறு விளங்குகையில் ஒரு நாள், துரோணர் தமது மாணவர்களில், வைத்த குறியை அடிக்கவல்ல வில்வீரன் யாவனென அறியக்கருதினார்; அதற்காக ஒரு பெரியமரத்தின் உச்சி நுனியிலே மரத்தினாலே செய்த ஒரு சிறு குருவியை நிற்க வைக்கும்படி ஏவலாளிக்குக் கட்டளை யிட்டு அவ்விடத்திற்கு மாணவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டுபோனார்.

மாணவர்களெல்லோரும் குருவின் திருவாயிலிருந்து என்ன கட்டளை பிறக்குமோ என்று எதிர் பார்த்தவர்களாய் மிகுந்த உற்சாகத்துடனிருந்தனர். அப்பொழுது துரோணர் அவர்களை நோக்கி, "நீங்களெல்லோரும் உங்கள் வில்லை வளைத்து அதில் அம்பைத் தொடுத்துக்கொண்டு சித்தமாயிருங்கள். நான் 'அடி' என்று கூறியவளவில், இதோ இம் மரத்தின் உச்

சிக் கிளையின் நுனியிலே இருக்கும் குருவியின் தலையை அம்பினாலே அடித்துக் கீழே விழ்த்தவேண்டும்" என்று ஆக்ஞைசெய்து, தர்மபுத்திரரைத் தம்மிடம் அழைத்து "அதோ அந்தக் குருவியைப்பார்" என்றார். அப்பால், "நீ அதனைச் செவ்வையாய்ப் பார்க்கிறாயா?" என்று கேட்டார். தர்மபுத்திரர், "ஆம் குருவியை நான் நன்றாய்ப் பார்க்கிறேன்" என்றார். துரோணர், "நீ குறியை அடிக்க உதவமாட்டாய் போ" என்று அவரை அனுப்பிவிட்டு, பிறகு துரியோதனன் முதலிய வர்களையும் ஒவ்வொருவராக அழைத்து, "நீ குருவி யைச் செவ்வையாய்ப் பார்க்கிறாயா?" என்று கேட்டார். அவர்களெல்லோரும் "நான் குருவியை முழுவதும் நன்றாய்ப் பார்க்கிறேன்" என்றார்கள்.

துரோணர் அவர்களிடம் வெறுப்படைந்து, "உங் களுக்கு வித்தை சொல்லிவைத்தது வீண்! நான் போதிக்கும் போது கவனித்தீர்களில்லை. கவனித்திருந் தால் இவ்வாறு சொல்வீர்களா? சொல்லமாட்டீர்கள்" என்று கூறி அவர்களையும் அனுப்பிவிட்டுப் பின் அர்ஜு னனை அழைத்து, "நீ குருவியைப் பார்க்கிறாயா?" என்று கேட்டார். அவன், "ஸ்வாமி, நான் அதன் கழுத்தை மாத்திரந்தான் பார்க்கிறேன்! வேறொன்றை யும் பார்க்கவில்லை" என்றான்.

இதைக் கேட்டதும் துரோணர் மகிழ்ந்தார். அவர் தேகம் சிலிர்த்தது. உடனே அவர், "அர்ஜுனா விடு அம்பை" என்றார். அர்ஜுனன் அம்பை எய்தான். அந்த அம்பு தவறாமல் குருவியின் கழுத்திலேபாய்ந்து, அதன் தலையை வீழ்த்தியது. துரோணர் உடனே

அர்ஜுனனைக் கட்டித்தழுவி முத்தமிட்டுக்கொண்டு பெருமகிழ்ச்சி யடைந்தார்.

அப்பால் ஒரு சமயம் துரோணர் தமது மாணவ ரோடு கங்கையிலே நீராடிக்கொண்டிருந்தார். துரோணர் தமது மாணவர் எல்லோரையும் அழைத்து, "ஒரு முதலை என்னுடைய காலைக் கவ்விக்கொண்டு என்னை இழுக்கின்றது! என்னை எவரேனும் விடுவியுங்கள்" என்றார். துரோணர் இவ்வாறு கூறி வாய் மூடுமுன் அர்ஜுனன் ஓடி அம்பெய்து நீரினுள்ளே இருந்த முதலையைக்கொன்று ஆசிரியரை ஆபத்திலிருந்து மீட்டான். அப்பொழுது அர்ஜுனனைப் புகழாதாரில்லை. ஆனால் துரியோதனனும் கர்ணனும் அந்தப் புகழ்மொழியைக் கேட்க மனமில்லாமல் வருந்தினார்கள்.

இவ்வாறிருக்கையில் துரோணர் இன்னொரு நாள் தமது மாணவர்களுடன் கங்கைக்குப்போய், ஒரு மண் பதுமையை அவர்களெல்லோருக்குங் காட்டி அதனைத் தண்ணீருக்குள்ளே போட்டார்; பின்பு அவர்களெல்லோருடைய கண்களையும் கட்டிவிட்டு, "மாணவர்களே, இப்பொழுது நான் தண்ணீரிலே போட்ட மண் பதுமையை உங்களில் யாரேனும் அம்பினால் அடியுங்கள் பார்க்கலாம்" என்று கூறினார். அர்ஜுனன் மாத்திரம் பதினைந்து பாணங்களினாலே அதை அடித்தான். வேறொருவராலும் அதனை அடிக்க முடியவில்லை.

அதுகண்ட துரோணர் மகிழ்ந்து அர்ஜுனனைப் புகழ்ந்தார். அதற்கப்பால் ஒரு நாள் துரோணர் அவனை அழைத்து, "வீரனே, உனக்கு மிக அருமையான பிரம்மசிரவஸ் என்னும் அஸ்திரத்தை மந்திரத்தோடு

உபதேசிக்கிறேன். நீ இதனை, மானிடர் மீது பிர யோகம் செய்யாதே. தேவர்களேனும் அசுரர்களேனும் உன்னை எதிர்த்து அமராடினால் அப்பொழுது அவர் களைக் கொல்லவேண்டிய அவசியம் நேரிடின் இதனை உபயோகித்துக்கொள்" என்று கூறி அந்த அஸ்திரத் தைக் கொடுத்து "உனக்கு நிகரான வில்லாளி இந்த உலகத்திலே கிடையாது" என்று கூறி அவனை வாழ்த் தினார்.

தான் தேடிய பாதரக்ஷை

ஓர் ஊரில் ஒரு நவாபு இருந்தார். அவர்க்கு ஏரா ளமான பொருளிருந்தது. அவர்க்கு ஓர் அருமைப் புத ல்வனுமிருந்தான். அவன் தக்க வயதை அடைந்த பின் பும் சொத்து விஷயமாய் ஒருவிதப் பொறுப்பில்லாமல் இருந்தான், அல்லாமலும் தானாகவும் பொருள் தேடுவ தில் கவலை கொள்ளாமல் இருந்தான். அது கண்ட அவன் தந்தை இவனுக்குப் பொருளின் அருமை தெரி யப் பண்ண வேண்டுமென்றுக் கருதி அவனுக்கு ஆடை யாபரணங்களைக் கொடுத்துக் காலில் தரித்துக்கொள்ளப் பாதரக்ஷை மாத்திரம் வாங்கிக் கொடுக்காமலிருந்தார். அதனால் அவன் தன் அன்னையிடம் போய்க் கெஞ்சிக் கேட்டுப் பாதரக்ஷைக்கு வேண்டிய பொருளை வாங்கிக் கொண்டு தானே கடைக்குப் போய் பாதரக்ஷையை விலை க்கு வாங்கித் தரித்துக் கொண்டான்.

அந்தப் பாதரக்ஷையை அவன் தினந்தோறும் வெளியே போய் வந்ததும் நன்றாய்த் துடைத்துப் பீரோ வில் வைத்துப் பூட்டி வைப்பதும் பிறகு தரிப்பதுமாய்ப் பாதுகாத்து வந்தான். இதைக் கண்ட அவன் தந்தை அவனை அழைத்து, அவன் செய்து வருவதை எல்லோ ருக்கும் சொல்லி, "பாதரக்ஷை இவன் தேடிய பொரு ளாகையினால் இவன் அதை இப்படிக் காப்பாற்றுகிறான்.

நான் தேடிய பொருள், இவன் சிரமப்பட்டுத் தேடாததா கையினால் இவன் தன் பாதரக்ஷையை விடப் பதின் மடங்கு விலையுயர்ந்த பொருளேயும் வீணாக்குகிறான். தான் தேடும் பொருளிடத்தில் எப்படிப்பட்ட அன்பு இவனுக்கிருக்கிறதென்பதை இவன் இப்போது உணர்கிறான். அதுபோல் நான் தேடிய பொருள்களில் எனக்கு எப்படிப்பட்ட அன்பிருக்கவேண்டுமென்பதையும் இவன் உணர்வான். அப்படிப்பட்ட என் பொருளே இவன் வீணாக்கலாமா? வீணாக்கினால் எனக்கு மனம் வருந்தாதா? அப்படி ஒரு தந்தையின் மனம் வருந்தும்படி நடப்பது மைந்தனுக்கு அழகா? தந்தையின் மனமகிழும் வழியிலே நடப்பதன்றோ மைந்தனின் கடமை?

நான் தேடிய பொருளே வீணாக்காமல் இவன் அதனை மேன்மேலும் விருத்தியாக்கப் பாடுபடுவானுனால் என் மனம் எவ்வளவு ஸந்தோஷமடையும்? இந்த வித்யாசத்தை இவன் உணர வேண்டுமென்றே நான் இவனுக்கு இவன் விரும்பும் ஆடையாபரணங்களே உதவிப் பாதரக்ஷை மாத்திரம் கொடாமலிருந்தேன்—என்றார்.

மைந்தன் இதைக் கேட்டதும் தந்தையை நோக்கிப் பொருள் தேடுவதிலுள்ள கஷ்டத்தையும் தேடிய பொருளில் ஒருவனுக்கிருக்கும் அன்பு இவ்வளவென்பதையு[illegible] [illegible]னைப் போற்றுவதே கடனென்பதையும் இட[illegible] [illegible]ணர்ந்தேன்." என்று கூறி வணங்கி விடைகொண்டு அன்று முதல் புத்திசாலியாக நடந்து வந்தான்.

வெகு தூரத்திலிருக்கும் தங்கள் தாய் தந்தையர் தங்களுக்கு அனுப்பும் பொருளே, நகர்ப்புறங்களுக்குப் படிப்பதன் நிமித்தமாக வந்த மாணவர்கள், காபி ஹோட்டிலிலும் கூத்திலும் கண் தலே தெரியாமல் செலவழித்துக் கொண்டு திரிவதை நாம் காண்கிறோம். இவர்கள் இந்தக் கதையைப் படிக்கவேண்டுமென்றே நாம் இதனை இம்முறை சொன்னோம்.

(பால விநோதினி.)

மனோராஜ்யம்.

ஒரு ஊரில் கருப்பன் என்ற குடியானவன் ஒரு வன் இருந்தான். அவனுக்கு ராமன் என்ற ஒரு மகன் உண்டு. கருப்பன் மிகவும் ஏழை. ஆதலால் தகப்பனும் மகனும் தினந்தோறும் மூங்கிலாலே கட்டிய கூடைகளை யெடுத்துக் கொண்டு சென்று சாணி திரட்டிக்கொண்டு வந்து அதை விரட்டியாகத்தட்டி விற்று, பணம் சம்பாதித்து, ஜீவித்து வந்தார்கள். 'அம்பட்டன் குப்பையைக் கிளறினால் அததனையும் மயிர்' என்பதுபோல் கருப்பன் வீடு முழுவதும விரட்டி மயமாகவே யிருந்தது.

(2) கருப்பன் வீட்டிற்குப் பின் ஒரு பெரிய பாழுங்கிணறு உண்டு. அது கூண்டில்லாமல் நிலை கிணறாகவே இருந்தது.

(3) ஒருநாள் கருப்பன் தன் வயிற்றுப் பிழைப் பின் நிமித்தம வெளியே சென்றிருந்தான். அப்போது அவனுடைய மகன் மாத்திரம் விரட்டி விற்பதின் பொருட்டு, வீட்டிலேயே இருந்தான். அப்போது ராமன் விரட்டியின் முன் உட்கார்ந்தவனாய் அடியில் வருமாறு யோசிக்கலானான்:—

" இங்கே இருக்கும் விரட்டிகளை விற்றால் குறைந்த பக்ஷம் மூன்று ரூபாயாவது கிடைக்கும். அதைக் கொண்டு அடுத்த ஊருக்குச் சென்று இரண்டு நல்ல ஜாதி நாய்க்குட்டிகளை வாங்கிவருவேன். அவைகள் ஒரு வருஷத்திற்குள் புஷ்டியடைந்து பெரிய நாய்களாகி

ஒவ்வொன்றும் ஏறக்குறைய நாலு நாலு குட்டிகளை யீனும். அப்பொழுது எல்லோரும் வந்து குட்டிகளை என்னிடத்தில் விலைக்குக் கேட்பார்கள். நான் ஒவ்வொரு குட்டிக்கும் ஒன்றரை ரூபாய் என்று விலை சொல்லுவேன். அப்படியே அவர்களும் பணத்தைக் கொடுத்து விட்டு வாங்கிக் கொண்டு செல்லுவார்கள். ஆகவே நாய்க் குட்டிகளை விற்ற பணம் மொத்தம் பன்னிரண்டு ரூபா ஆகும்.

(4) இவ்வளவு பணத்தை முதலாகக் கொண்டு நான்கு ஆட்டுக் குட்டிகளை விலைக்குக் கொள்வேன். அவைகள் ஒரு வருஷம் செல்லுமுன் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு குட்டிகள் போடும். இளங்குட்டிகளுக்கு ஒரு வருஷம் ஆகும்போது பெரிய ஆடுகள் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு குட்டிகள் போடும். மறுபடியும் அதற்குள்ளாக இளங்குட்டிகளும் தலைக்கு இரண்டிரண்டு குட்டிகளை யீனும். பின் எல்லாவற்றையும் ஒரே மொத்தமாக நூற்றைம்பது ரூபாவுக்கு விற்று விடுவேன்.

பிறகு அந்தப் பெரிய தொகையைக் கொண்டு ஒரு சிறிய கடை வைப்பேன். இதைப் பார்த்து அடுத்த வீட்டுக்காரனும் தன் மகளை எனக்குக் கலியாணம் செய்து கொடுப்பான். அவள் என் வீட்டிற்கு வந்தபிறகு என்றாவது என் பேச்சைக் கவனியாமல் இருப்பாளேயானால் நான் கோபங் கொண்டு அவளை நையப் புடைக்க ஆரம்பிப்பேன், அப்பொழுது அவள் பயந்து கொண்டு தன் வீட்டிற்குப் புறக்கடை வழியாக ஓட ஆரம்பிப்பாள். அவள் ஓட ஓட நானும் விடாமல் துரத்திக் கொண்டே ஓடுவேன்" என்று எண்ணிய வண்ணமாக எழுந்திருந்து

கொல்லைப் பக்கமாகத் தன்னையும் அறியாமல் ஓடியவன் அவ்விட மிருந்த பாழ்ங்கிணற்றினுள் பொத்தென்று விழுந்து அடிபட்டு மூர்ச்சையாய் விட்டான். இச்சப்தம் கேட்ட அக்கம் பக்கத்தவர்கள் ஓடிவந்து ராமனைக் கிணற்றினின்றும் வெளியே யெடுத்து மூர்ச்சை தெளிவித்தார்கள். பின் "எதனால் கிணற்றில் விழ நேரிட்டது" என்று அவர்கள் உறுத்திக் கேட்க அவன் நடந்ததை யெல்லாம் நவின்றனன். இதைக் கேட்டவர்கள் வயிறு புண்பட நகைத்து ராமனின் மூடமதியைப் பற்றி பல விதமாகப் பரிகசித்துப் பேசிக்கொண்டே தம் தம் இல்லத்திற்குச் சென்றார்கள்.

5. ஆதலால் வீணான மனோராஜ்யம் செய்வது கூடாதென்பதும், அதைச் செய்பவன் அபாயத்திற்கு ஆளாவான் என்பதையும் உணர்ந்து செம்மையான வழிகளில் மனதைச் செலுத்தி நன்மையடைய முயலுவோமாக. சுபம்!

S. ஜெம்புநாதன்
தமிழ் மாணவன். போர்டு ஹைஸ்கூல்
கொள்ளேகாலம்.

தயை கூர்ந்து சந்தாதார்கள் யாவரும் இவ் வருஷ சந்தாவை வழக்கம்போல் மணியார்டர் செய்து பத்திரிகையை ஆதரித்து வரவேண்டுகிறோம். (ப. ர.)

ஸ்ரீ ராமாவதாரம்

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஞ்சநேயரைச் சூழ்ந்து கொண்ட கிங்கரர் களனைவரும் தங்கள் தங்கள் கைகளில் சூலம், வாள், முசலம், வேல், தண்டம், சக்கரம், உலக்கை, பாசம், மழு, முதலிய கொடிய ஆயுதங்களை ஏந்தி நின்றார்கள். அவர்களுடைய சரீரமோ ஆலகால விஷத்தைப் போலுங் கருத்திருந்தது; தேகத்தில் கவசமணிந்திருந்தார்கள்; ஒவ்வொருவருடைய புஜங்களும் அஷ்டதிக்குகளையும் நீண்டுவனவாயிருந்தன; கைகள் மேக மண்டலத்தையும், முடிகள் வான லோகத்தையும் முட்டிக் கொண்டிருந்தன; கால்கள் மலைகளை இடறிக் கொண்டு நின்றன. பல யானைகள் ஏக காலத்தில் நுழையத் தகுந்த வாயையும், வளைந்த பிறைச் சந்திரனைப் போன்ற பற்களையும், கொதிக்கும் கண்களையும் கொண்டிருந்தார்கள். போர் என்றால் இவர்களடையும் ஸந்தோஷத்திற்கு அளவேயில்லை.

இவர்களுடன் வாயுபுத்திரர் கொஞ்சநேரம் விளையாடிக் கொண்டிருந்து மலைகளை அடியோடு தூக்கி யெறிவது போல் இவர்களைத் தூக்கிச் சுழற்றி வான லோகத்தை முட்டும்படி வீசி யெறிந்தார். தலை யறுங்

தவர்களும், உடல் சரிந்தவர்களும், கால் முறிந்தவர்களும், கை யொடிந்தவர்களுமாய்க் கிங்கரர்கள் தரையில் வீழ்ந்து, உயிர் துறந்து, இரத்தப் பிரவாகத்தில் மிதக்கலாயினர். மாருதி இந்த வீரர்களை யெல்லாம் ஒழித்த பின் இன்னும் எவர்கள் வருகிறார்களோ வரட்டுமென்று எதிர் பார்த்த வண்ணம் கைலையங்கிரியைப் போல் விளங்கிக் கொண்டிருந்தார்.

தூரத்திலிருந்து இந்த வேடிக்கையைப் பார்த்து அதிசயித்த சில அரக்கர்கள் வேகமாயோடி, தங்களரசனை இராவணனுக்கு இதனை அறிவித்தார்கள். உடனே தசக்கிரீவனுக்கு இருகண்களுஞ் சிவந்தன. "காட்டில் உழலத் தகுந்த ஓர் அற்பப் பூச்சியை வெல்ல இவர்களால் முடியாமற் போயிற்று? முடியாவிடினும் அதனிடம் இவர்கள் தங்கள் உயிரைப் பறி கொடுத்த தல்லவோ விநோதமாகத் தோன்றுகிறது! காரணம் புலப்படவில்லை" என்று சிந்திக்கலானான்.

அப்போது அருகிலிருந்த சம்புமாலி இராக்ஷஸ சைநியங்களைத் தனக்குத் துணையாகக் கூட்டிக்கொண்டு "க்ஷண நேரத்தில் அந்தக் குரங்கு படும் பாட்டைப் பாருங்கள்" என்று வீராவேசத்துடன் புறப்பட்டு வந்தான்.

இப்போது ஆஞ்சநேயருக்கும் சம்புமாலிக்கும் பெருத்த யுத்தம் கைகலந்தது. வெகுநேரம் இருதிறத்தாரும் போராடினார்கள். மாருதி இவர்களைக் கிள்ளுக்கீரையாய் மதித்து, சித்திரவதை செய்து எமபுரஞ் சேர்த்தனர். இவ் வுடலையுங் கவனித்த சில அரக்கர் தங்கள் மூக்கின்மேல் விரலையூன்றி வியப்புற்றுத் தக்ஷணமே

சென்று இராவணனுக்கு இதனைத் தெரிவித்து வருந்தினார்கள்.

இந்த வார்த்தையைக் கேட்ட இராவணனுக்குக் கோபம் சந்திரனைக் கண்ட கடல்போல் பொங்கத் தொடங்கிற்று. அவன் விழிகளினின்றும் இரத்தக் குமிழிகள் குபுகுபுவென்று பொங்கிச் சிந்தின. "இந்த நிமிஷம் உடனே போய் அந்தக் குரங்கைப் பிடித்து வருகிறேன்" என்று தன் சபையானது கிடுகிடுவென்று நடுங்கும்படி கூவி, தனது சிம்மாசனத்தினின்றும் திடீரென் றிறங்கினான்.

அது கண்ட சேனாதிபர் ஐவர் சடக்கென் றெழுந்து அவனுடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு "மகேச்வரா! என்ன யோசனை செய்தீர்? புழு பூச்சிகளைப் புசிக்கும் ஓர் அற்பப் பிராணியின் மீதா தங்கள் பராக்கிரமத்தைக் காட்டவேண்டும்? இது சினங்கொண்ட கருடன் ஒரு கொசுவை எதிர்த்தது போலன்றோ முடியும்? அன்றியும், தங்கள் புஜபலத்தைக் கண்டு இரவும் பகலும் நடுக்கமுற்றுக்கொண்டிருக்கும் வெள்ளியங்கிரியும் அவ் வச்சத்தை விட்டு விடாதா? மற்றும் இந்நடத்தையைக் கேட்டால் திரிமூர்த்திகளுடைய வாடிய முகமும் சூரியனைக் கண்ட தாமரை மலர் போல் புன்னகை புரியுமே? தங்களுக்கென்ன ஏவலாளரில்லையா? வலியற்ற சிலரை யனுப்பி அதனால் நேர்ந்த அபஜெயத்திற்கு இப்படியுஞ் செய்யத் துணியலாமா? நாங்களெதற்காகத் தங்கள் சமூகத்தைக் காத்துக் கொண்டிருக்கிறோம். சுவாமி தயவு செய்து சிம்மாசனத்திலே அமருங்கள். எங்களை

யனுப்ப மனங் கொள்ளுங்கள். வேறு சிந்தனைவேண்டாம்" என்று கூறி வணங்கினார்கள்.

இராவணன் பஞ்சசேனாபதிகள் மொழிந்ததைக் கேட்டு, கோபந்தணிந்து, அவ்வாறே அவர்களுக்கு உத்தரவளித்தான்.

உத்தரவு பெற்றதும் சேனைத்தலைவர் ஐவரும் உன்னதமான பெருமையைப் பெற்றவர்போல் உளங்களித்து, அரசனை மிகவுந் தாழ்மையோடு பணிந்து, வேண்டிய உதவிச் சேனைகளையும் ஆயுதங்களையும் உடன் கொண்டு வாத்திய கோஷத்துடன் புறப்பட்டனர். அவ்வேளை அவர்களுடைய பெண்பிள்ளைகளும் பெற்றோரும் மற்றோரும் அவர்களைத் தடுத்து "எங்கள் வார்த்தையைக் கவனியாமல் நீங்கள் செல்லுவதானால், நாங்களும் கூடவே வந்து எங்களுடைய உயிரையும் அந்தக் குரங்குக்கே தத்தஞ்செய்து விடுகிறோம்" என்று புலம்பினார்கள்! இவ்வண்ணம் துணிந்த உறவினர்க்கு வேண்டிய தைரியங் கூறி, பஞ்ச பூதங்களின் வல்லமைக்கு நிகரான பஞ்ச சேனாதிபதிகளும் ஆரவாரத்துடன் கிளம்பினார்கள்.

இப்படி இவர்கள் வருவதையும் வாயுபுத்திரர் தனிமையாயிருப்பதையுங் கண்ட தேவர்கள் "இது எப்படி முடியுமோ? ஆஞ்சநேயர் துணையில்லாதவராயிருக்கின்றாரே" என்று அவருக்காக மனதிரங்கி வருந்தினார்கள்.

பஞ்ச சேனாதிபர்க்கும் அஞ்சனைச் செல்வர்க்கும் உடனே யுத்த முண்டது. இரு கட்சியார்க்கும் நடந்த யுத்த மானது மகா கொடியதாயும் காண்போர் அஞ்சக்

ஶ்ரீ சங்கராசாரியார்